# யா/ ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை



## வருடாந்த பரிசளிப்பு விழாத் தொகுப்பு

## 2017

- பாடசாலையின் பெயர் : யா/ ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
- ஆரம்பம் : 1892 .03 .01
- கிராமசேவையாளர் பிரிவு : ஈவினை J/209
- பிரதேச செயலாளர் பிரிவு : வலிதெற்கு உடுவில்
- பிரதேச சபை பிரிவு : வலிதெற்கு பிரதேச சபை
- தேர்தல் தொகுதி : கோப்பாய் 083
- கோட்டம் : உடுவில் கோட்டம்
- வலயம் : வலிகாமம் கல்வி வலயம்
- பாடசாலை குறியீட்டு இலக்கம் : 1010029
- பாடசாலை தொகை மதிப்ப இல : 09237
- பரீட்சை எண் : 11083
- பாடசாலை வகை : III
- வகுப்புப் பரம்பல் : தரம் 1 – 5 வரை
- பாடசாலை அபிவிருத்திக் கணக்கு இல. 109-1-001-8-065166 மக்கள் வங்கி சுன்னாகம்
- மாணவர் தொகை 2017 இல்

ஆண்கள் : 62

பெண்கள் : 54

மொத்தம் : 116

➢ மகுடவாசகம் : "வாழக்கல்"

➢ நோக்கக் கூற்று (VISSION)

எமது பிரதேச தனித்துவங்களைப் பேணி அறநெறிப்பண்புகளை வளர்த்து, சமநிலைமிக்க மாணவர்களை உருவாக்குதல்.

➢ பணிக்கூற்று (MISSION)

இணைந்து செயலாற்றுவதன் ஊடாகக் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் உயர் அடைவினை வெளிப்படுத்துதல்.

இரு பாடசாலைகளாக ஆரம்பிக்கப்பட்டது

யா/ ஈவினை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 1892 .03 .01

யா/ விக்னேஸ்வரா வித்தியாசாலை ஈவினை 28.09.1957

இருபாடசாலைகளும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது 1962

இருபாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டு 1975.01.01. இல்

யா/ ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக வெவ்வேறு இடத்தில் இரு பிரிவாக இயங்கியது

இடம்பெயர்ந்து இயங்கிய இடங்கள்

யா/நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை 1995.09.22 - 1995.10.10

யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை 1995.10.10 – 1996.05.10

2007 இல் அதிபர் செ. பரமேஸ்வரனின் பெருமுயற்சியால் யா/ விக்னேஸ்வரா வித்தியாசாலை ஈவினை காணி கைவிடப்பட்டு யா/ ஈவினை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக் காணியில் ஒன்றிணைக்கப்பட்டு இயங்குகின்றது.

# வருடாந்த பரிசளிப்பு விழா - 2017

காலம் : 09. 12.2017

நேரம் : மு.ப. 11.00 மணி

இடம் : பாடசாலை மண்டபம்

தலைமை

## திரு. சோ. ஸ்ரீ கிருஸ்ணா

பாடசாலை முதல்வர்

பிரதம விருந்தினர்

## திரு. ச. ரவி

உதவிப்பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு

மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

சிறப்பு விருந்தினர்கள்

## திரு. த. மாதவன்

கோட்டக் கல்விப்பணிப்பாளர், உடுவில்

## திரு. கே. சிவசுப்பிரமணியம்

சட்டத்தரணி, பிரபல நொத்தாரிசு

கௌரவ விருந்தினர்கள்

## திருமதி. ம. குமுதினி

ஆசிரியை,

யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்

## திரு. இ. அரிகரன்

தலைவர், கற்பக விநாயகர்

சனசமூக நிலையம், ஈவினை

# அதிபர் அறிக்கை

எமையெலாம் வழிநடத்திக்கொண்டிருக்கும் தெய்வீக சக்தியை எம்மனதில் நிலை நிறுத்தி, ஈவினை கற்பக விநாயகரின் பெருங்கருணையை வேண்டி வணங்கி இப்பாடசாலையின் உயர்வுக்கும் சிறப்புக்கும் காரணமான அனைத்து நல்லுள்ளங்களையும் உளமகிழ்வுடன் வேண்டி வருடாந்த பரிசளிப்பு விழாவின் அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாண மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உதவிப்பணிப்பாளர் திரு. ச. ரவி அவர்களே, ஆசியுரை நிகழ்த்தி அமர்ந்திருக்கும் ஈவினை கற்பக விநாயகர் தேவஸ்தான சிவாச்சாரியார் சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. த. மாதவன் அவர்களே மற்றும் சட்டத்தரணியும் பிரபல நொத்தாரிசுமான திரு. கே. சிவசுப்பிரமணியம் அவர்களே, கௌரவ விருந்தினராக விழாவுக்கு கௌரவம் வழங்கிக் கொண்டிருக்கின்ற யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியை திருமதி. ம. குமுதினி அவர்களே மற்றும் ஈவினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் கற்பக விநாயகர் சனசமூகத்தலைவருமாகிய திரு. இ. அரிகரன் அவர்களே, எமது பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் அவர்களே, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களே, ஓய்வு நிலை உத்தியோகத்தர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, நலன்விரும்பிகளே, பெற்றோர்களே, சமூகப்பெரியோர்களே, பழைய மாணவர்களே, மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது இனிய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் உயர்திரு சங்கரப்பிள்ளை ரவி அவர்கள் ஆரம்பக்கல்வியை மு/புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை, யா/ சென்சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் ,க.பொ.த. சாதாரணம், க.பொ.த உயர்தரக் கல்வியினை

முு/ புதுகுடியிருப்பு மத்திய கல்லூரி) பயின்றதுடன். இளநிலை பட்டப் படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியற்துறையிலும், இயற்கை வள முகாமைத்துவ பட்டப்பின் படிப்பினை பேராதனை பல்கலைக்கழகத்திலும், நிர்வாக முகாமைத்துவத்தின் பட்டப்பின் படிப்பினை இலண்டன் தொழில் நுட்பக் கல்லூரியிலும், முது நிர்வாக முகாமைத்துவ பட்டத்தினை பிரித்தானியாவின் வேல்ஸ்லம்பிட்டர் பல்கலைக்கழகத்திலும், அத்துடன் துறைசார் பயிற்சிக் கற்கைகளை ஆஸ்திரியாவின் சால்ஸ்பேக் பல்கலைக்கழகம் , நெதர்லாந்தின் லிஜி பல்கலைக்கழகம், ஹவாயில் பரிபூரண நெருக்குதல் முகாமைத்துவ பயிறசிகளையும், மாலைதீவில் சூழற் தொகுதி மற்றும் ஆபத்து குறைப்பு செயற்பாடும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும், தாய்லாந்தில் ஆபத்து முகாமைத்துவமும், புவி இடஞ்சார் தொழில்நுட்பமும் விஞ்ஞானத்தின் பிரயோகமும் , இந்தியாவின் புதுடெல்லியில் அவசர முன்னெச்சரிக்கை மற்றும் பதிலிறுத்தல் ஜப்பானில் நீர்சார் அனர்த்தமுகாமைத்துவம் தொடர்பான பயிற்சியும் பெற்றுள்ளார்.

2011 முதல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளராக பதவிவகித்து வருகின்றார். எனினும் அவர் கல்விப் புலத்துடன் நெருங்கிய தொடர்புகளை பேணி சிறார்களின் கல்வியில் அக்கறையுடன் செயற்பட்டு பல வழிகளிலும் உதவி புரிந்து வருகின்றார். எமது அழைப்பினை ஏற்று வருகைதந்திருப்பதுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற வறிய மாணவர்களுக்கு மூன்று துவிச்சக்கர வண்டிகளை பெற்றுத்தந்த பெருமைக்குரியவர்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்து விழாவினைச் சிறப்பித்துக்கொண்டிருப்போர் வரிசையில் உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளராக பதவி வகிக்கின்ற திரு. தர்மலிங்கம் மாதவன் அவர்கள் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியப்பணியில் இருந்து 1986 ஆம் ஆண்டில் அதிபராகப் பதவியுயர்வு பெற்று தற்போது கோட்டக்கல்விப் பணிப்பளராகப் பணியாற்றி வருகின்றார்.

சிறப்பு விருந்தினராக சிறப்பித்துக்கொண்டிருக்கும் உயர்திரு. கே. சிவசுப்பிரமணியம் அவர்கள் உரும்பிராயைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாவார். இவர் சட்ட உதவிகள் வழங்கி வருவதற்கு மேலதிகமாக கல்விப்புலத்தில் ஈடுபாடுகொண்டவர். வறியமாணவர்களுக்கு பல உதவிப்பணிகள் வழங்கி வருகின்றார். எமது பாடசாலை மாணவர்களுக்கு 45 புத்தகப்பைகளை வழங்கிய பெருமைக்குரியவர்.

கௌரவ விருந்தினர்களாக வருகை தந்து விழாவுக்கு கௌரவத்தை வழங்கிக் கொண்டிருக்கும் திருமதி மகேந்திரம் குமுதினி ஈவினைக் கிராமத்தை சேர்ந்தவர் தற்போது யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றுகின்றார். இவர்களது குடும்பத்தினர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு தங்கப்பதக்கத்தை வழங்கிக் கௌரவிக்கும் பெருமைக்குரியவர்கள். இவர் பாடசாலையின் நிறுவுநர் மற்றும் வரலாற்று உரையை நிகழ்த்துவது பாடசாலைக்கு பெருமையை சேர்ப்பதாகவுள்ளது.

கௌரவ விருந்தினராக வருகைதந்திருக்கும் திரு. இ. அரிகரன் அவர்கள் ஈவினைக் கிராமத்தைச் சேர்ந்த சமூகசேவகராகவும், அரசியல் பணியாளராகவும் விளங்குகின்றார். கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கற்பக விநாயகர் சனசமுக நிலையத் தலைவராகவும் பதவி வகிக்கின்ற பெருமைக்குரியவர். பரிசளிப்பு விழாவுக்குரிய சிற்றுண்டிகளை வழங்கி உதவிபுரிந்தள்ளார்.

## எங்கள் பாடசாலையின் விபரங்கள்

எமது பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தில் உடுவில் கோட்டத்தில் உள்ளடங்குகின்ற வகை III பாடசாலையாகும். 125 அகவையுடைய இப்பாடசாலை கடந்த காலங்களில் கஸ்ரப்பிரதேச பாடசாலையாக இருந்த நிலையில் இன்று 116 மாணவர்களுடன் முன்னேற்றம் கண்டுவரும் பாடசாலையாகவுள்ளது. பாடசாலையின் அபிவிருத்திப் பாதையில் வளவாய்ப்புகள், பலம், பலவீனமான விடயங்கள் போன்றவற்றை நோக்குவோம்.

## பௌதிக வளங்கள்

➢ கட்டிடம் 1 – 100 அடி நீளமும் 20 அடி அகலமும் உடைய வகுப்பறைக் கட்டிடமும் மேடையும் தரம் 3,4,5 வகுப்புகள் இயங்குகின்றன.

➢ கட்டிடம் 2 - 50 அடி நீளமும் 20 அடி அகலமும் உடைய வகுப்பறைக் கட்டிடமும் செயற்பாட்டறையும் தரம் 1,2 வகுப்புகள் இயங்குகின்றன. இதனுடன் 10 அடி நீளமும் 15 அடி அகலமும் உடைய சமயலறை இணைந்துள்ளது.

➢ நீர்த்தாங்கி - உண்டு

➢ மலசலகூடக்கட்டிடம் - உண்டு

➢ மைதானம் - இல்லை

➢ நூலகம் - இல்லை

➢ வழிபாட்டு மண்டம், நிகழ்வுகளுக்கான மண்டபம் - இல்லை

## மனிதவளம்

2007 இல் 43 மாணவர்களாக இருந்த இப்பாடசாலையில் 2017 இல் 116 மாணவர்கள் கற்றுவருகின்றனர். கடந்த வருடம் 26 மாணவர்கள் தரம் 01 இல் இணைந்துள்ளனர்.

எமது பாடசாலையில் தற்போது 05 நிரந்தர ஆசிரியர்களும், 01 பகுதிநேர ஆங்கில ஆசிரியரும் கடமையாற்றுகின்றனர். அவ்வாசிரியர்கள் விபரம் வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு .சோ. ஸ்ரீகிருஸ்ணா | அதிபர் | SLPS 3 | B.A(Hons), PGDE |
| 2. | திருமதி. ப.செல்வநாயகம் | உபஅதிபர் | SLTS 1 | Pri.Trd |
| 3. | திருமதி. ச. ரவிச்சந்திரன் | ஆசிரியர் | SLTS 2-1 | Pri.Trd |
| 4. | செல்வி. க. அருள்தேவி | ஆசிரியர் | SLTS 2-1 | Pri.Trd |

5. திருமதி க. பத்மதாஸ் ஆசிரியர் SLTS 2-1 Pri.Trd
6. திருமதி பி. செந்தில்மணாளன் ஆசிரியர் SLTS 2-1 B.A PGDE

**பகுதிநேர ஆங்கில ஆசிரியர்**

7. திருமதி நி. றதீஸ் ஆசிரியர் SLTS 2-1 HNDE Eng.Trd

**பதில் உதவி ஆசிரியர்**

செல்வி நவரத்தினராசா காருண்யா க.பொ. த. உயர்தரம்

இவ்வாசிரியர்கள் பாடசாலை செயற்பாடுகளிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஆற்றிவரும் பங்களிப்புகளை பாராட்டி அவர்களின் வினைத்திறனான சேவை மேலும் பாடசாலைக்கு கிடைக்கவேண்டும் என வேண்டுகின்றேன்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம் எமது** பாடசாலையில் சிறப்பாக இயங்கி வருகின்றது. பொறுப்பாசிரியராக திருமதி கவிதா பத்மதாஸ் விளங்குகின்றார். இக்கழகமானது ஆசிரியர்களுக்கு தினமும் இடைவேளையின் போது தேநீர் வழங்குதல், வருகைதரும் விருந்தினர்களை வரவேற்றல், ஆசிரியர்களின் இல்லங்களில் நடைபெறும் இன்பதுன்பங்களிலும் பங்கெடுத்து வருகின்றது.

**பாடசாலையின் நிர்வாகமும் மேற்பார்வையும்**

இதன் செயற்பாட்டிற்கு அதிபரின் கீழ் எமது பாடசாலையின் முகாமைத்துவ குழு பொறுப்பாக இருந்து செயற்படுகின்றது. எமது பாடசாலை சிறிய பாடசாலை ஆதலாலும் ஆசிரியர் தொகை குறைந்ததாலும் ஆசிரியர்கள் அனைவரும் முகாமைத்துவ குழுவினராக பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்காற்றி வருகின்றனர். உப அதிபராக கடமையாற்றும் திருமதி. ப. செல்வநாயகம் அவர்களும் நிர்வாகமும் மேற்பார்வையும் செயற்பாடுகளில் பங்குபற்றி வருகின்றார். எமது பாடசாலையில் வினைத்திறனான முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு பங்குபற்றல் முகாமைத்துவ முறைமைகளை செயற்படுத்தி வருகின்றோம்.

## ஆசிரியர்களின் சாதனைகள் பிரதீபா பிரபா விருது மற்றும் பதவியுயர்வுகள்

இவ்வருடம் எமது பாடசாலை ஆசிரியரான திருமதி கவிதா பத்மதாஸ் அவர்கள் மாகாணமட்ட நல்லாசிரியர் விருதான "பிரதீபா பிரபா" விருதினை பெற்றுள்ளமையும், வலிகாமம் கல்வி வலயத்தின் சாதனையாளர் விருதினைபெற்றுள்ளமையும் எமது பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதால் அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சி முரளீதரன் அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக உத்தியோகத்தராக 26.09.2017 முதல் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளமையை பெருமையுடன் பாராட்டி வாழ்த்தி எமது பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகளை நினைவு கூர்ந்து நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

## பெற்றோர்களின் பங்களிப்பு

பாடசாலைகள் சமூகமயமாக்கும்நிறுவனங்கள் எனவேதான் பாடசாலைகள் சமூகத்திற்கும் சமூகம் பாடசாலைக்கும் பங்களிப்புகளை நல்கி சிறந்த தொடர்புகளைப் பேணி வருதல் வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் பெற்றோர்களது பங்களிப்பு அதிகம் வேண்டப்படுகின்றது. பாடசாலையின் பங்குதாரர்களாகவும் பயனாளிகளாகவும் உள்ள பெற்றோர்கள் பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்களிப்பினை ஆற்றி வருகின்றனர். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தினை வகுப்பாசிரியர்களுடன் கலந்துரையாடுகின்றனர். மேலும் தவணை ஆரம்பத்திலும் தவணை முடிவிலும் நடாத்தப்படுகின்ற பெற்றோர் கூட்டத்திலும், பொதுக்கூட்டங்களிலும் விசேட கூட்டங்களிலும் பங்குபற்றி வருகின்றனர். எமது பாடசாலையில் நடைபெறும் சிரமதான நிகழ்வுகளிலும் விழாக்களிலும் பங்கெடுத்து வருகின்றனர். மாணவர்களைப் போட்டிகளுக்கு அழைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் பல ஆசிரியர்கள் செல்லமுடியாத

நிலைமையுள்ளதால் பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களை அழைத்துச் செல்வதுடன் முழுமையான ஒத்துழைப்பும் வழங்குகின்றனர். பாடசாலைக்கு அதிகளவு பங்களிப்பு வழங்கி வரும் பெற்றோர்களை நாம் கௌரவிக்கவேண்டும். பெற்றோர்களின் பங்களிப்பு உயர உயர மாணவர்களின் கல்வியும் உயர்வடையும் என இவ்விடத்தில் உறுதியாக எடுத்துரைக்கின்றேன்.

## கல்வி அபிவிருத்திப் பாதையில் எமது பாடசாலை

கிராமியப் பாடசாலையான எமதுபாடசாலை மாணவர்களுக்கு உரிய அனைத்துத் திறன்களையும் வளங்கக்கூடியவகையில் வினைத்திறன் மிக்கதாக விளங்கவேண்டும். கல்வியின் நிறைவு ஒழுக்கம் ( The End of Education is Character ) என்பதனை தாரக மந்திரமாகக்கொண்டு மாணவர்களை அறிவுப் பொருளாதார உலகின் சவால்களை எதிர்கொள்ளும் அறிவுடைய எல்லோருக்கும் அதேவேளை ஒழுக்கமுடைய ஆன்மீகப் பற்றுள்ள நல்லோராக்கும் செயற்பாடுகளையம் பாடசாலையில் முன்னெடுத்து வருகின்றோம். மாணவர்கள் மிளிரக்கூடிய முப்பரிமாண விடயங்களான கடமை, (Duty) ஒழுக்கம், (Discipline) பக்தி (Devotion) என்பவற்றிலும் கவனம் செலுத்தி வருகின்றோம். எதிர்வரும் கல்வியாண்டுகளில் மாணவர்கள் அகத்தே பிரகாசிக்க ஆன்மீகக் கல்விக்கும் புறத்தே பிரகாசிக்க ஆங்கிலக் கல்விக்கும் அதீத முக்கியத்துவம் அளிக்கப்படும் என நான் இவ்விடத்தில் எடுத்துரைக்கின்றேன்.

கல்வி அபிவிருத்திப்பாதையில் நாம் கவனிக்க வேண்டிய விடயங்களாக புலமைப்பரிசில் பரீட்சை, அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள், இணைப்பாடவிதானச்செயற்பாடுகள் என்பவற்றை நோக்குதல் வேண்டும்.

**2017 தேசிய மட்டப் புலமைப்பரிசில் பரீட்சையில்** எமது மாணவர்கள் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக மூன்று மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்துள்ளனர். உயர்புள்ளியாக நி. சண்ஷிகா177 புள்ளிகளைப்பெற்றுள்ளார். மேலும் நி. கிஷாலினி 161

புள்ளிகளையும், ச. பவிஸ்ணன் 160 புள்ளிகளையும் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். 28 மாணவர்கள் தோற்றிய நிலையில் 19 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்றதுடன் அவர்களில் 13 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் சித்திபெற்றுள்ளனர்.இச்சித்தி பெற முழுமையாகப் பங்களிப்பு வழங்கிய தரம் 5 வகுப்பாசிரியர் திருமதி கவிதா பத்மதாஸ் அவர்களுக்கும் அவருடன் இணைந்து கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்

**அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில்** முதன்மை நிலை ஒன்றைப் பூர்த்திசெய்த மாணவர்களில் 78 வீதமானோர் குறித்த இலக்கை அடைந்துள்ளனர். இதேபோல் முதன்மை நிலை இரண்டில் 85 வீதமானவர்களும், முதன்மை நிலை முன்றில் 80 வீதமானவர்களும் குறித்த இலக்கை சிறப்பாக எட்டியுள்ளனர்.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை நோக்குமிடத்து

ஆரம்பக்கல்விப் போட்டிகள், மற்றும் மன்றச்செயற்பாடுகள், மாணவ தலைமைத்துவச் செயற்பாடுகள், களப்பயணங்கள், மேலைநாட்டு வாத்திய இசைக் குழுச்செயற்பாடுகள், செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் போன்றன சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு மாணவர்கள் வெற்றியீட்டி வருகின்றனர். இவ்வருடம் எமது மாணவர்கள் ஆரம்பக்கல்வி போட்டிகளில் வலயமட்டங்கள் வரை வெற்றியீட்டியுள்ளனர். செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் 4 கலப்பு பிரிவில் எமது அணி வலயமட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

### மன்றச்செயற்பாடுகள்

எமது பாடசாலையில் மாணவர்களில் கற்றலுடன் பல்வேறுபட்ட திறன்களை வளர்ப்பதற்கும் அவர்களது ஆளுமை மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்ப்பதற்கும் பின்வரும் மன்றங்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

1. மாணவர் மன்றம்
   பொறுப்பாசிரியர் திருமதி. ப. செல்வநாயகம்
2. தமிழ் மன்றம்
   பொறுப்பாசிரியர் திருமதி.பி. செந்தில்மணாளன்
3. ஆங்கில மன்றம்
   பொறுப்பாசிரியர் திருமதி. நி. றதீஸ்
4. இந்து மன்றம்
   பொறுப்பாசிரியர் திருமதி. க. பத்மதாஸ்
5. சுகாதார மன்றம்
   பொறுப்பாசிரியர் திருமதி. ச. ரவிச்சந்திரன்
6. விசேட கல்விச் செயற்பாடு, வழிகாட்டலும் ஆலோசனையும் -
   பொறுப்பாசிரியர் திருமதி. ச. ரவிச்சந்திரன்
7. அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள்
   பொறுப்பாசிரியர் செல்வி க. அருள்தேவி
8. மேலைத்தேச வாத்தியம்
   பொறுப்பாசிரியர் திருமதி. க. பத்மதாஸ்

இவ் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்பட்டு வெற்றிகளைப்பெற்று வருகின்றனர்.

**2017 ஆம் ஆண்டில் எமது பாடசாலையில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகள்**

1. 2016 ஆம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழா - 17.01.2017- பிரதம விருந்தினராக திரு காண்டீபன் பிரதிக்கல்விப்பணிப்பாளர் வலிகாமம் வலயம் வருகைதந்தார்.
2. கால்கோள் விழா – 11.01.2017 – விருந்தினராக சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள் வருகைதந்திருந்தார்கள்
3. தைப்பொங்கல் விழா - 16.01.2017
4. செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் - 13.02.2017 – பிரதமவிருந்தினராக கௌரவ வடமாகாணசபை உறுப்பினர் திரு.பா. கஜதீபன் வருகைதந்தார்.
5. சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடு – 21.03.2017- வைத்தியர் திருமதி.கே.கேமா அவர்களால் முன்னெடுக்கப்பட்டது.
6. டெங்கு சிரமதானம் - 05.04.2017- வளலாய் இராணுவத்தினரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.
7. சித்திரைப்புத்தாண்டு விழா – 27.04.2017
8. டெங்கு சிரமதானம் - 27.09.2017- நிலாவரை இராணுவத்தினரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

9. வாணிவிழா – 30.09.2017–விருந்தினராக திரு. இ. ரவீந்திரன், செல்வி. சி. தர்சினி ஆகியோர் வருகைதந்தனர்.
10. ஆசிரியர் தினவிழா - 06.10.2017
11. சிறுவர் தினநிகழ்வுகள் செலான் வங்கியின் அனுசரனையுடன் இடம்பெற்றது. 17.10.2017
12. டெங்கு சிரமதானம் - 21.10.2017- நிலாவரை இராணுவத்தினரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

## 2017 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட வளங்கள் மற்றும் உதவிகள்

பாடசாலையில் பலதேவைகள் காணப்பட்டன அத்தேவைப்பாடுகளில் சில பெற்றுக்கொள்ளப்பட்டன அவற்றை வழங்கியோர் விபரம் வருமாறு

**கட்டிடங்கள்**

1. ஆசிரியர் மலசலகூடம் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத் திட்டம்
2. மாணவர் மலசலகூடம் - சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டம் 2017

**ஏனைய வளங்கள்**

3. சுவர்மணிக்கூடு – திருமதி.க.பத்மதாஸ்
4. கணினி, கணினி மேசை – திரு. பா. பாலகணேசன்
5. வகை 2 மேசை,கதிரை 15 சோடி – வலயக்கல்வி அலுவலகம் (தளபாட இடமாற்றத்தின்) ஊடாக
6. பிளாஸ்ரிக் கதிரை 6 – திருமதி கலாவதி வசீகரன்
7. மேடைக்குரிய திரைச்சீலை – பாடசாலை இந்துமாமன்றம்
8. மதிய உணவுச் சமையல் பாத்திரங்கள் - உலக உணவுத்திட்டம் ஊடாக
9. அலுமாரி – திருமதி த. பத்மகாந்தன்
10. மல்ரிமீடியா (பல்லூடக எறி) – கௌரவ வடமாகாணசபை உறுப்பினர் திரு. பா.கஜதீபன்
11. மணி – திருமதி மகேஸ்வரி

12. பிறின்டர் – திருமதி. சித்திரா
13. D.V.D.Player –திருமதி. செல்வரத்தினம் ஞானதேவி
14. வூபர் ஒலிப்பெட்டி – திருமதி சுதாகரன் சங்கீதா
15. பிளாஸ்ரிக் கதிரை – திரு. இ. கெங்காதரன்
16. 70 புத்தகப்பைகள் - சட்டத்தரணி திரு. கே. சிவசுப்பிரமணியம்
17. செயற்பட்டு மகிழ்வோம் போட்டிக்கான பரிசில்கள் (ரூபா 10000 பெறுமதியான) - திரு. க. முருகையா
18. செயற்பட்டு மகிழ்வோம் போட்டிக்கான பரிசில்கள் - திரு. அமரர் சண்முகலிங்கம் ஞாபகார்தம்
19. சிறுவர்தின அனுசரனை செலான்வங்கி சுன்னாகம்- 10000 ரூபா

இவ்வுதவிகள் புரிந்தோர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகள்

**பாடசாலையின் தேவைப்பாடுகள்**

1. கணினிகள் மடிக்கணினி உட்பட
2. ஸ்கானர்
3. போட்டோக்கொப்பி இயந்திரம்
4. நூலகம்
5. விளையாட்டு மைதானம்
6. விளையாட்டு முற்றம்
7. பொதுநோக்கு மண்டபம்
8. ஆசிரியர், மாணவர்களுக்கான வாகனத்தரிப்பிடம்
9. அலுவலக மேசைகள், அலுமாரிகள்
10. பாடசாலை முற்றத்தினை மழை வெள்ளம் தேங்காது மண்பரப்பி நிரப்புதல்
11. ஆசிரிய வளம்

மேற்படி தேவைப்பாடுகளை நல்லுள்ளம்கொண்டோரிடம் வேண்டி நிற்கின்றோம்.

## நன்றிக்குரியவர்கள்

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப்பணிப்பாளர் உயர்திரு ச. ரவி அவர்களுக்கும். சிறப்பு விருந்தினராக வருகைதந்து அலங்கரித்துக்கொண்டிருக்கும் உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. த. மாதவன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினரான சட்டத்தரணி திரு கே. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய சிவாச்சாரியார் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய திரு. அரிகரன் அவர்களுக்கும், பாடசாலை வரலாற்றுரை நிகழ்த்திய திருமதி. ம. குமுதினி அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் இவ்விழாவுக்கு வருகைதந்து எம்மை மகிழ்வித்த அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், மற்றும் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள், சமுகப் பெரியோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். பரிசளிப்பு விழா பொறுப்பாசிரியர் திருமதி. செ. பிரபாலினி மற்றும் எமதுபாடசாலையின் உப அதிபரான திருமதி ப. செல்வநாயகம் அவர்கள் பரிசளிப்பு விழாவுக்குபல வழிகளில் உதவிகள் வழங்கியமைக்காகவும் ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளத்தேவையை வழங்கிவரும் நலன்விரும்பிகளுக்கு, ப்ரிசளிப்பு விழாவுக்கு பரிசுப்பொருட்கள் நிதி பங்களிப்பு செய்த அனைவருக்கும் நன்றிகள் எமது பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கு உதவிபுரிகின்ற வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் நன்றிகள் இன்னமும் பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பெற்றோர்கள் நலன்விரும்பிகள், அனைவருக்கும் நன்றிகளைக்கூறிக்கொண்டு எனது அதிபர் அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

## பாடசாலை வரலாறு

சைவமும் தமிழும் இரு கண்களாகக்கொண்டு தனிப்பெரும் புகழுடன் விளங்கும் யாழ்ப்பாணத்தில் யாழ்நகரிலிருந்து ஏழு மைல் தொலைவில் வடக்கு பக்கமாக விளங்குவது ஈவினை எனும் கிராமம் ஆகும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

எனும் குறளுக்கு ஏற்ப விவசாயத்தையே பெருந்தொழிலாகக்கொண்டு இக்கிராமத்தவர் வாழ்ந்தனர். கிராமத்தின் திக்கெட்டும் பச்சைப்பசேலாகவே என்றும் காட்சியளிக்கும். இக் கிராமத்தவர் தங்கள் கிராமத்தின் பெயருக்கு ஏற்ப ( ஈவினை - ஈ + வினை, ஈ - ஈதல், வினை – தொழில்) ஈதலையே மனதிற்கொண்டு தங்களை நாடிவருவோரை

"விருந்து புறத்ததாற் தானுன்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று"

என்ற குறளுக்கு ஏற்ப உபசரித்து மகிழ்வதில் தமக்குத்தாமே நிகரானவர்கள்.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிநடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் மிஷனறிப்பாடசாலைகள் எங்கும் ஆரம்பிக்கப்பட்டன. அதன் செல்வாக்கால் ஈவினைக்கிராமத்திலும் மிஷனறிமார் ஒரு பாடசாலையை நிறுவ முயன்றனர். பொன்னையா எனும் பெரியார் உவந்தளித்த ஐந்தரைப்பரப்புக் காணியில் ($5^1/_2$) ஒரு பாடசாலை ஆரம்பித்தனர். யா/ ஈவினை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை எனும் நாமம் சூட்டினர். அதன் தலைமை ஆசிரியராக அவ்வூர் சின்னப்பு வைத்திலிங்கம் என்பவர் பொறுப்பு வகித்தார். கூரைக் கிடுகால் வேயப்பட்டும் சுவர் செம்மண்ணாலும் தரை மண்ணாலும் ஆக்கப்பட்டு இருந்தது. இப்பாடசாலை அக்கால வழமைக்கு ஏற்ப அரிவரி, முதலாம், இரண்டாம், முன்றாம் வகுப்புகளைக் கொண்டிருந்தது. தொடர்ந்து வாதரவத்தையை சேர்ந்த இராமலிங்கமும் அவரைத்தொடர்ந்து வயாவிளானைச் சேர்ந்த கந்தையாவும் அவரின் பின் பருத்தித்துறையூர் சி. சரவணமுத்துவும் • தலைமையாசிரியர்களாகப் பொறுப்பு வகித்தனர்.

சரவணமுத்து காலத்தில் பாடசாலை பலதுறைகளிலும் வளர்ச்சி அடைந்தது இவரது விடா முயற்சியால் மிஷனறிமார் 1940 ஆம் ஆண்டில் நிலமும் சுவரும் சீமெந்தினாலும் அமைக்கப்பட்டதும் கூரை கிடுகுகளால் வேயப்பட்டதுமான ஓரளவு நிரந்தர கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்தனர். ஊர் மக்களின் உதவியுடன் பாடசாலையின் புதிய கட்டிடத் திறப்பு விழாவை பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

தலைமையாசிரியர் சி. சரவணமுத்து மாற்றலாகிச் சென்ற பின்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த செல்லத்துரையும் அதன் பின்னர் கட்டைவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பியும் தலைமையாசிரியரானார். சின்னத்தம்பி அவர்கள் ஊர் மக்களுடன் நன்குபழகி பாடசாலையை வளர்ச்சியுறச் செய்தார். அதன் பின்னர் அச்செழுவை சேர்ந்த சிவப்பிரகாசம் தலைமை ஆசிரியராகவும் அவரது துணைவியார் உதவியாசிரியராகவும் கடமையாற்றினார்கள். இவரது முயற்சியால் ஆறாம் ஏழாம்வகுப்புகள் இங்கு நடத்தப்பட்டன.

மிஷனறிப்பாடசாலையான யா/ ஈவினை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் ஒரு சைவப்பாடசாலையை இக்கிராமத்தில் அமைக்கவேண்டும் எனப் பேரவாக் கொண்ட கதிரிப்பிள்ளை செல்லையா என்பவர் தனது மைத்துனர் இளைய தம்பி செல்லையா என்பவர் நன்கொடையாக வழங்கிய 8 பரப்பு காணியில் தனது சொந்தச்செலவில் ஒரு நிரந்தரக் கட்டிடத்தைக்கட்டி அதனைச் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையாளரிடம் கையளித்து ஈவினை விக்னேஸ்வர வித்தியாசாலை எனப்பெயர் சூட்டி 1957. புரட்டாதி மாதம் நவராத்திரி பூசையின் மறுநாளான விஜயதசமி தினமான இருபத்தியெட்டாம் திகதி ஆரம்பித்து வைத்து இப்பாடசாலையின் ஸ்தாபகரானார். அதன் முதல் அதிபராக குப்பிளானைச் சேர்ந்த கோ.சுப்பிரமணியம் என்பவர் பதவியேற்றார். இப் பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை நடைபெற்றது. அதிபர் அவர்களின் பெருமுயற்சியால் மாணவர்கள் சைவப்பற்றுள்ளவர்களாகத் திகழ்ந்தனர். வெள்ளிக்கிழமையில்

ஆராதனைகள் நடத்தப்பட்டதுடன் ஆண்டுதோறும் பாரதிவிழா சிறப்பாக நடாத்தப்பட்டது.

கல்விச் சீர்த்திருத்தச் சட்டங்களுக்கு அமைய பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு காணி மற்றும் சொத்துகளும் சுவீகரிக்கப்பட்டன. அதனடிப்படையில் விக்னேஸ்வர வித்தியாலயக் காணி கல்விப்பணிப்பாளர் எஸ். வை. டி சில்வா இனது அறிவித்தலின் பிரகாரம் கோப்பாய் பிரிவு பாடசாலைப் பொறுப்பதிகாரி நாகமுத்து ரிச்சாட் பாலசிங்கத்தினால் 20.01.1962 இல் சுவீகரிப்பு இலக்கம் 12882 இன் கீழ் சுவீகரிக்கப்பட்டது. இதேபோல் மெதடிஸ்த மிஷன் 16.07.1962 இல் சுவீகரிப்பு கட்டளை இலக்கம் 1483 இன் கீழ் சுவீகரிக்கப்பட்டது. இதன் பின்னர் இவ்விரு பாடசாலைகளும் அரச உடைமையாக்கப்பட்டன.

1962 இல் சுப்பிரமணியம் அவர்கள் மாற்றலாகிச் செல்ல அச்செழுவைச் சோந்த செல்வி த.நல்லதம்பி தலைமையாசிரியரானார். அவரைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையாவும் அவரின் பின்னர் கோப்பாயை சேர்ந்த க. இ. குமாரசுவாமி என்பவர் அதிபர் பதவியை ஏற்றார். அவரது காலத்தில் பாடசாலை பலதுறைகளிலும் வளர்ச்சி பெற்றது. இவரது பெருமுயற்சியினால் கல்வித்திணைக்களப் பகுதியினரால் பாடசாலைக்கு புதிய தளபாடங்கள் வழங்கப்பட்டன. வட்டாரப் போட்டிகள், விவேகானந்த சபை போட்டிகள் என்பவற்றில் மாணவர்கள் சிறந்து விளங்கிப் பல பரிசில்களைப் பெற்றனர்.

அதிபர் க. இ. குமாரசாமி மாற்றலாகிச் செல்ல அவ்வூர் துரையப்பா தம்பையா என்பவர் அதிபரானார். அவர் இளைப்பாறிய அதே காலத்தில் ஈவினை மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை அதிபர் சிவப்பிரகாசம் அவர்களும் இளைப்பாறினார். எனவே விக்னேஸ்வர வித்தியாசாலையின் அதிபராக சிறுப்பிட்டியை சேர்ந்த செல்லத்துரை என்பவரும் ஈவினை மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை அதிபராக குப்பிளானைச் சேர்ந்த திருமதி பவளம் சண்முகம் பதவியேற்றார். திருமதி பவளம் சண்முகம் மாற்றலாகிச் செல்ல விக்னேஸ்வர வித்தியாசாலையின் அதிபர் செல்லத்துரை அவர்கள் ஈவினை மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை

அதிபராக மாற்றம் பெற்றார். இதனால்விக்னேஸ்வர வித்தியாலய அதிபராக கோப்பாயைச் சேர்ந்த சி.வல்லிபுரமும் அவரின் பின்னர் அப்பாடசாலையின் ஸ்தாபகரின் புதல்வர் ஈவினைவாழ் செல்லையா செல்வரத்தினமும் அதிபர்களாக விளங்கினர். இக்காலப்பகுதியில் ஈவினை மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை அதிபராக கல்வியங்காடு வாழ் க.பரமநாதன் அவர்களும் பதவி வகித்தனர்.

இவ்விரு பாடசாலைகளிலும் மாணவர் தொகை குறைவடைந்ததனாலும் ஒரு சிறிய கிராமத்தில் இரு பாடசாலைகள் தனித்தனியே இயங்குவதிலும் பார்க்க அவை இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டால் பாடசாலை வளர்ச்சியடைந்து மாணவர்கல்வி மேம்பாடடையும் என்பதை மனதிற்கொண்ட கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய வ.க. ஈசுவரபாதம் அவர்களின் அரிய முயற்சியினாலும் ஈவினை மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க. பரமநாதன் மற்றும் ஈவினை விக்னேஸ்வர வித்தியாசாலை அதிபர். செ. செல்வரத்தினம் ஆகியோர் வட்டாரக்கல்வி அதிகாரி அவர்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பாலும் இரு பாடசாலைகளும் 01.01.1975 இல் ஒன்றிணைக்கப்பட்டு அன்று முதல் யா/ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பெயர் பெற்றது. அதன் அதிபராக க. பரமநாதன் பொறுப்பேற்றார். இருபாடசாலைக்கட்டடங்களிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. 1980 இல் மெதடிஸ்த மிஷன் பாடசாலை கட்டிடம் நிரந்தரமாக அமைக்கப்பட்டது. 1981 இல் கல்விப்பகுதியினரால் பெண்களுக்குரிய மலசலகூடமும் அமைக்கப்பட்டது. 1985 இல் பரமநாதன் அவர்கள் காலம்செல்ல குப்பிளானைச் சேர்ந்த வ. மகாலிங்கம் அதிபரானார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளால் பாடசாலைகளும் அப்பாதிப்புகளை எதிர்கொண்டன. ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இடம்பெயர்ந்து 1995.09.22 முதல் 1995.10.09 வரையான காலப்பகுதியில் நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் இயங்கியது அதன்பின்னர் 1995.10.10 முதல் 1996.05.09 வரையான காலப்பகுதியில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலையிலும் இயங்கி 1996.05.10 இல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத்தொடங்கியது.

அதிபர்கள் வரிசையில் வ.மகாலிங்கம் ந.ஜெயக்குமார், (28.02.1995 முதல் 31.12.2002 வரை) ச.சண்முகலிங்கம் (01.01.2003 – 27.01.2006), பதில் அதிபராக திருமதி கலைவாணி கிருஸ்ணகுமார் (27.01.2006 – 01.03.2006), திரு. யோகேஸ்வரன் (01.03.2006 – 30.01.2007), பதில் அதிபராக திருமதி கலைவாணி கிருஸ்ணகுமார் (30.01.2007 – 22.03.2007) போன்றோரும் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள்.

2007 அதிபராக சைவப்புலவர் செ. பரமேஸ்வரன் பதவியேற்று பாடசாலையைப் பலவழிகளிலும் முன்னேற்றினார். பாடசாலை பௌதிக வளவாய்ப்புகளிலும் கல்வித்துறையிலும் முன்னேற்றம் கண்டது. இவரது காலப்பகுதியில் ஒரே பெயரில் இரு இடங்களில் சுமார் 750 மீற்றர் ($^3/_4$ கிலோ மீற்றர் துரத்தில்) பகுதி பகுதியாக பாடசாலை இயங்கியமை கல்விக்கும் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பெரும் சிரமமாக இருந்தது. எனவே இப்பாடசாலையை ஒரே இடத்தில் ஒரு கூரையின்கீழ் கொண்டுவருவதற்கு அதிபர் செ. பரமேஸ்வரன் பெருமுயற்சி எடுத்தார். முன்னாள் கொத்தணி அதிபர் ஆ.சி. நடராஜா இப்பாடசாலையை முன்னேற்றுவதற்கு ஒரேவழி பாடசாலையை ஒரே இடத்தில் இயங்கவைப்பதுதான் என்ற கருத்தை முன்வைத்தார். கிராமத்தவர்கள், கல்விப்புலத்தினர், ஊடகங்கள் என்பன இக்கருத்தை வலியுறுத்தின. அக்கால வலிகாமம் கல்விவலய வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அதனை ஏற்றுக்கொண்டு கட்டிட வளத்தினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார். யுனிசெப் நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதி மற்றும் கனடாவாழ் பழையமாணவர்களின் நிதிப்பங்களிப்புடனும் 100 அடி நீளமும் 20 அடி அகலமும் உடைய கட்டிடம் அமைக்கப்பட்டு பாடசாலை விக்னேஸ்வரா வித்தியாசாலை காணி கைவிடப்பட்டு மெதடிஸ்த மிஷன் காணியில் ஒரே கூரையின் கீழ் ஒன்றாக இயங்கத்தொடங்கியது. 2009 இல் மின்சார இணைப்பு ஏற்படுத்தப்பட்டு நீர்ப்பம்பி பொருத்தப்பட்டது. 2010 இல் யுனிசெப்பின் உதவியுடன் சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. 2016.01.02 இல் அதிபர் செ.பரமேஸ்வரன் மாற்றலாகிச் செல்ல இப்பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பவானி

செல்வநாயகம் பதில் அதிபராக 05.10.2016 வரை பதவி வகித்தார். 06.10.2016 தற்போதைய அதிபர் சோ.ஶ்ரீகிருஸ்ணா அதிபராக கடமையேற்று பாடசாலையை பல வழிகளிலும் முன்னேற்றி வருகின்றார். இக்காலப்பகுதியில் தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சையிலும் 3 மாணவர்கள் சித்தி பெற்று வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளனர்.

தொகுப்பு சோ. ஶ்ரீகிருஸ்ணா


- மூலம் - வ.மகாலிங்கம், (1985), பாடசாலை வரலாற்றுக் குறிப்புகள் முன்னை நாள் அதிபர் யா/ஈவினை அ.த.க பாடசாலை,
- தினக்குரல் பத்திரிகை
- பாடசாலையின் சம்பவத்திரட்டு புத்தகம்

# கணிதபாடத்தில் டீன்ஸ் குற்றிகளும் அதன் பயன்பாடுகளும்

எந்தவொரு கற்பித்தல் செயற்பாட்டின் போதும் உபகரணங்கள் பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். அதுவும் ஆரம்பக்கல்வியில் கட்டாயமானது என உலகில் உள்ள கல்வியியலாளர்கள் அனுபவம் வாயிலாகக் கண்ட உண்மைகளாகும். இந்தவகையில் சூள்ஸ் பி. டீன்ஸ் என்ற கணிதவியலாளர் "டீன்ஸ்" குற்றிகள் எனும் எண்ணிகளை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

இன்று இந்த டீன்ஸ் குற்றிகள் இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. இதை ஆரம்பக்கல்வி கணித பாடத்தில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை நோக்குவோம்.


கணிதபாடத்தில் முதன்மைநிலை ஒன்றிலுள்ள பிள்ளைக்கு முதலில் எண்ணுக்கு முன் எண், பின் எண் கற்பிக்கும், போது எண் பெயர், எண் குறியின் போதும் வரிசைப்படுத்தலின் போதும், மற்றும் கூட்டல், கழித்தலின் போதும் இதனைப் பயன்படுத்தலாம்.

மேலும் டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தி கணித எண்ணக்கருவை விருத்தி செய்யலாம். உதாரணங்கள் வருமாறு

- ➢ எண்கோலம் கற்பிக்க
- ➢ சதுர தளவடிவங்களை அறிமுகம் செய்ய
- ➢ சதுரமுகியின் பண்புகளைக் கண்டறிய
- ➢ மேசையின் மேற்பரப்பளவை எதேச்சை அலகாக 100 ஐ டீன்ஸ் குற்றிகளைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறாக டீன்ஸ் குற்றிகளின் பயன்பாடுகளை உச்சமாகப் பயன்படுத்தி கணிதபாட அடைவு மேம்பாட்டை விருத்தி செய்வோம்.
ஆக்கம் - திருமதி கவிதா பத்மதாஸ் (ஆரம்பக்கல்வி பயிற்சி)

உதாரணம் வரிசைப்படுத்தல் கற்பிக்கும் போது




மேலும் எண்கள் கற்பிக்கும்போது

உதாரணம்

| எண்ணிகள் | எண்பெயர் | எண்குறி |
|---|---|---|
| □ | ஒன்று | 1 |
| □□ | இரண்டு | 2 |
| □□□ | மூன்று | 3 |


எண்களின் இடப்பெறுமானம் கற்பிக்கும் போது


115 நூற்றியொன்று



மற்றும் முதன்மைநிலை 2, 3 தரங்களில் கூட்டல், கழித்தல், பெருக்கல் வகுத்தல்களுக்கு பயன்படுத்தலாம்.


உதாரணம் கூட்டல்



3
10
______
13
______


கழித்தல்




வெளியில் எடுத்தல் 4 – 1


வகுத்தல்

பிரித்தல்




சமபகுதிகளாகப்
8/2 = 4





பெருக்குதல்



2X3= 6

ஆக்கம் ஆசிரியர் திருமதி க. பத்மதாஸ்

# எம் அன்னையை அரவணைப்பீர்.....

## பெற்றோர் உள்ளத்திலிருந்து

அதி கஷ்ரப் பிரதேசத்தில் கல்விப் பயிர்வளர்க்கின்ற எம்பாடசாலை அன்னையவள் சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கி கல்வி வளர்ச்சியிலே காலுன்றி வளர்கின்றாள். 1892 ஆம் ஆண்டில் சிறு கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டாலும் இன்றுவரை அன்னையவளின் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமை வேதனைக்குரிய விடயமாகும். பிரார்த்தனை அறை, நூலகம், கணினி அறை, விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு முற்றம் என்பன இன்றி தன்மழலைகளுக்காக றிறைவான கல்வியை வளங்க அன்னை தத்தளிக்கின்றாள்

பெரிய பாடசாலைகளில் கணினிகள், கட்டிடங்கள், நவீன கற்பித்தல் உபகரணங்கள் மேலதிகமாக இருக்கின்றன. ஆனாலும் எம் அன்னை இவ்வசதிகள் குறைவாகவே இருக்கின்றாள். பசி இருப்பவனுககே உணவு தேவை வயிறு கிடைக்க உணவு உண்டுவிட்டு ஏப்பம் விடுபவர்களுக்கு உணவு அவசியமில்லை. எத்தனை பாடசாலைகளில் அளவுக்கு அதிகமான கணினிகள் இருக்கின்றன. ஆனால் எம் அன்னையிடம் ஒரே ஒரு கணினி மாத்திரம் இருக்கின்றது. அதனைக்கூடப்பயன்படுத்த பாதுகாப்பான இடம் இல்லை. ஈவினைக்கிராம மக்கள், அயற்கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள், வெளிநாடுகளில் வாழும் எம் உறவுகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோர்கள் அன்னையின் வேதனைகளை தீர்க்க முன்வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். நல்லுள்ளம்கொண்டவர்கள் நியாயமாக உதவி செய்தால் நாளும் வளர்ந்திடுவாள் எம்மினிய அன்னையவள்

ஆக்கம் :- சிவகுமார் தீபா

(பெற்றோர் புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம்)

## உள்ளம் எனும் ஊற்றிலிருந்து ஆசான் பற்றிய துளிகள் ..

கல்வி எனும் ஆழ்கடல் தன்னிலே – நாம்
தத்தளித்து தவித்த நேரத்திலே
கலங்கரை விளக்காக வந்து – எம்
வாழ்வுக்கு அர்த்தம் கூறியவர் எம் ஆசான்

கல்வி எனும் கனியை எமக்கு அளித்து
அறிவுரைகள் பல எடுத்துக்கூறி
விரல் பிடித்து வினாக்களால்
விழி திறந்த தெய்வம் ஆசான்

வெற்றியை பகிரும் நண்பன் ஆசான்
கருணையில் உயர் தெய்வம் ஆசான்
தோல்வியின் போது தோள்கொடுக்கும் - தெய்வமும்
கவலையை மறைக்கும் சொற்களும் ஆசான்

எமது அறிவுப்பசியைப் போக்கி – எம்மை
சிகரம் தொடவைத்த
சிற்பிகளாம் எம் ஆசான்களே – உங்கள்
புகழ் என்றும் வாழி! வாழி!

ஆக்கம் :- ச. துஷாரா (மாணவி தரம் 4)

# My School

My School name is J/Evinai G.T.M.School

Grade one to Grade five classes arein my School

Our school principal Name is Mr. S. Srikrushna

Beautiful garden is in my my School

Hundred and sixteen students and seven teachers are including in our school

Mrs. Pathmathas kavitha is in our class teacher

My School Teachers are teaching with very interest and they are help to improve our Knowledge

Many club are helping to our school activities

J/Evinai G.T.M.School is very pretty

We are obey in our school rules and regulation then school is very need so Love my school

Thank you

T.Kruchiga (student Grade five)

## பரிசளிப்பு விழாவுக்குரிய பரிசுப்பொருட்கள் அன்பளிப்புச்செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | திரு. நாராயனசாமி சண்மகராசா | கொப்பிகள் |
| 2. | திரு. வேலாயுதம் முத்ரூபன் | பரிசுப்பொருட்கள் |
| 3. | திரு. ச. சிவகுமார் | பரிசுப்பொருட்கள் |
| 4. | திருமதி. இலச்சுவரி | பரிசுப்பொருட்கள் |
| 5. | திரு. நந்தகோபன் | பரிசுப்பொருட்கள் |
| 6. | திரு. நவநீதரன் | பரிசுப்பொருட்கள் |
| 7. | திரு. செ.செந்தூரன் | பரிசுப்பொருட்கள் |
| 8. | திரு. லக்சுமி றேட்சென்றர் | பரிசுப்பொருட்கள் |
| 9. | திரு. சி.ஸ்ரீஸ்கந்தராசா | பரிசுப்பொருட்கள் |
| 10. | திரு. சொலமன் ரவி | பரிசுப்பொருட்கள் |
| 11. | திரு. சின்னையா பாஸ்குமார் | பரிசுப்பொருட்கள் |
| 12. | திரு குட்டித்தம்பி ரமேஸ் | பரிசுப்பொருட்கள் |
| 13. | திரு. சின்னத்தம்பி சிவதாஸ் | பரிசுப்பொருட்கள் |
| 14. | திரு. தர்மகுலசிங்கம் நிசாந்தன் | பரிசுப்பொருட்கள் |
| 15. | திரு. சிவனேஸ்வரன் (ஓவியன்) | பரிசுப்பொருட்கள் |
| 16. | கன்னண் களஞ்சியம் | பரிசுப்பொருட்கள் |
| 17. | திரு. எஸ். வி. முருகேசு | பரிசுப்பொருட்கள் |
| 18. | சித்திவிநாயகர் ஸ்ரேசனறி | பரிசுப்பொருட்கள் |
| 19. | திரு. த. குருசாந்தன் | பரிசுப்பொருட்கள் |
| 20. | திரு. கணேசன் | பரிசுப்பொருட்கள் |
| 21. | திரு. இ. ரவீந்திரன் | பரிசுப்பொருட்கள் |
| 22. | திரு. கே. பிரபாகர் | பரிசுப்பொருட்கள் |

## பரிசளிப்பு விழாவுக்குரிய பொருட்கள், சேவைகள் அன்பளிப்புச்செய்தோர் விபரம்

1. திருமதி. செல்வரட்னம் ஞானதேவி (20000 பெறுமதிவரையான) பரிசளிப்பு விழாத்தொகுப்பு வெளியீடு மற்றும் D.V.D Player அன்பளிப்பு
2. திருமதி. சுதாகரன் சங்கீதா வூபர் ஒலிப்பெட்டி (5000 ரூபா பெறுமதியான)

3. திருமதி. செந்தில்மணாளன் பிரபாலினி பயிற்சிப்புத்தகங்கள் (5000 ரூபா பெறுமதியான)
4. திரு. ஐ. நித்தியானந்தம் மற்றும் திரு. நிர்மலறோகான் மதியபோசனம்
5. திரு. இ. அரிகரன் குளிர்பானம், சிற்றூண்டிகள்
6. திரு. இ. நவநீதன் ஒலி அமைப்பு வாடகை (2000)

**பரிசளிப்பு விழாவுக்குரிய நிதி அன்பளிப்புச்செய்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. ச. கிருஸ்ணகுமார் | 1000 |
| 2. | திரு. நா. தவலோகநாதன் | 1000 |
| 3. | திரு. சி. யோகேஸ்வரன் | 1000 |
| 4. | திரு. இ. தயானந்தன் | 500 |
| 5. | திரு. திருமதி அன்ரனிருாஜ் | 500 |
| 6. | திரு. ஞானச்சந்திரன் | 500 |
| 7. | திருமதி. சி. அசோக்குமார் | 500 |
| 8. | திரு. ஆலாலசுந்தரம் | 500 |
| 9. | திரு. அ. குகனேஸ்வரன் | 500 |
| 10. | திரு. வி. விஜயதீபன் | 500 |
| 11. | திரு. பி. கனகரத்தினம் | 500 |
| 12. | திரு. இ. பத்மகாந்தன் | 500 |
| 13. | திருமதி. ம. ரஜனி | 1000 |
| 14. | திரு. த. நகுலேஸ்வரன் | 1000 |
| 15. | திரு. இ. பார்த்தீபன் | 1000 |
| 16. | திரு. க. சந்திரகுமார் | 1000 |
| 17. | செல்வி. அருளானந்தம் | 1000 |
| 18. | திரு. க. செல்வப்பிரகாசம் | 1000 |
| 19. | திரு. சி. ரஜனிகாந் | 1000 |
| 20. | திரு. எஸ். குணசேகர் | 500 |
| 21. | திருமதி. ச. பிரதீபா | 500 |
| 22. | திருமதி. ஜெ. பிரேமா | 500 |
| 23. | திரு. இராசலிங்கம் | 500 |
| 24. | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் | 3000 |
| 25. | இலங்கைவங்கி புன்னாலைக்கட்டுவன் | 5000 |

# பரிசுபெறுவோர் விபரம்

## தரம் 01

1. ச. ஹருத்திகாஸ் - வகுப்பு நிலை 01, பாடங்கள் முதன்மைக் கணிதம், பண்ணிசைப்போட்டி குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2
2. யோ. சுலக்சனா - வகுப்பு நிலை 02, பாடங்கள் முதன்மைகணிதம், முதன்மைத் தமிழ் பண்ணிசைப்போட்டி, சித்திரப்போட்டி குடும்பமட்டம்2, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2, திருக்குறள் மனனம் குடும்பமட்டம் 3
3. சி. அனுஜா - வகுப்புநிலை 3, பாடங்கள் முதன்மைத்தமிழ், பண்ணிசைப்போட்டி குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம்2
4. ச. யனுசன் - பாடங்கள் முதன்மைச்சமயம், போட்டிகள் சித்திரம், பண்ணிசை குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம்2
5. ஜெ அர்ச்சுதன் - பாடங்கள் சுற்றாடல், போட்டிகள் சித்திரம், பண்ணிசை குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2
6. கு. மயுரன் - பாடங்கள் சுற்றாடல், போட்டிகள் சித்திரம், பண்ணிசை குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2
7. பா. லாஸ்மியா - பாடங்கள் சுற்றாடல், போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2
8. ம. நிலக்சன் - பண்ணிசைப்போட்டி, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2, திருக்குறள் மனனம் குடும்பமட்டம் 2
9. சு. பாவனா - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2
10. சி.கீர்த்தனா - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 2, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2
11. க. இந்துஜா - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 2
12. சு. யுவராஜ் - பாடம் கிறிஸ்தவம்

**தரம் 02**

1. நி.சண்ஷிகன் - வகுப்புநிலை 1 முதன்மைத் தமிழ், சமயம், சுற்றாடல். போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2, சிங்கள வினாடி வினாவிடை குடும்பமட்டம் 1
2. ஜெ. ஜெஸ்மியா - வகுப்புநிலை 2 முதன்மைத் தமிழ், கணிதம், போட்டிகள் சித்திரம், பண்ணிசை குடும்பமட்டம் 1, திருக்குறள் மனனம் ஆங்கிலக்குழுப்பாடல் குடும்ப மட்டம் 2, சிங்கள வினாடி வினாவிடை குடும்பமட்டம் 1
3. கு. சாருஜா வகுப்புநிலை 3 முதன்மைத் தமிழ், சமயம், போட்டிகள் சித்திரம், பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்ப மட்டம் 2, சிங்கள வினாடி வினாவிடை குடும்பமட்டம் 1, திருக்குறள் மனனம் குடும்பமட்டம் 3,
4. ச. மதுரவன் - முதன்மைத் தமிழ், சமயம், போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல், குடும்ப மட்டம் 2,
5. ச. சயன் - பாடங்கள் முதன்மைக் கணிதம் போட்டிகள் ஆங்கிலக்குழுப்பாடல் குடும்ப மட்டம் 2, சிங்கள வினாடி வினாவிடை குடும்பமட்டம் 1
6. ப. பிரியங்கா – பாடங்கள் முதன்மைக்கணிதம், போட்டிகள் சித்திரம், பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்ப மட்டம் 2, சிங்கள வினாடி வினாவிடை குடும்பமட்டம் 1, திருக்குறள் மனனம் குடும்பமட்டம் 2 .
7. அ. ஜெனிபர் – பாடங்கள் முதன்மைக் கிறிஸ்தவம் போட்டிகள் ஆங்கிலக்குழுப்பாடல் குடும்ப மட்டம் 2
8. ம. சஜின் - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்ப மட்டம் 2
9. ர. அனுஸ்ரியன் - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1
10. ர. தீபிகா – சித்திரம்,போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2
11. த. சகானா – போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2

12. ந. சங்கவி - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2
13. ர. சர்மி - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2
14. ச. பவதாரணி - போட்டிகள் பண்ணிசை குடும்பமட்டம் 1, ஆங்கிலக்குழுப்பாடல் குடும்பமட்டம் 2

**தரம் 3**

1. க. சஞ்ஜித்தா – வகுப்புநிலை 1, பாடங்கள் கணிதம், சமயம், சுற்றாடல், வரவொழுங்கு, போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல், குடும்ப மட்டம் 3 , பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 2, திருக்குறள் , ஆங்கில தின உறுப்பெழுத்து, செயற்பட்டு மகிழ்வோம்
2. செ.யதுர்சனன் - வகுப்புநிலை 2, பாடங்கள் ஆங்கிலம், வரவொழுங்கு, போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல், குடும்ப மட்டம் 3 , பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 2, திருக்குறள் , ஆங்கில தின உறுப்பெழுத்து, சொல்வதெழுதல், செயற்பட்டு மகிழ்வோம்
3. ச.அபிஷாயினி - வகுப்புநிலை 3, பாடங்கள் தமிழ், வரவொழுங்கு, போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல், குடும்ப மட்டம் 3 , பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 2, திருக்குறள் , ஆங்கில தின உறுப்பெழுத்து, செயற்பட்டு மகிழ்வோம்
4. மு.லதீசன் - வரவொழுங்கு, போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல், குடும்ப மட்டம் 3 , பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 2, திருக்குறள் , செயற்பட்டு மகிழ்வோம்
5. கு.யானுஜா - வரவொழுங்கு, போட்டிகள், பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2 , சித்திரம் குடும்ப மட்டம் 2 , செயற்பட்டு மகிழ்வோம்

6. உ.யருள்தாஸ் - பாடம் கிறிஸ்தவம் , போட்டிகள் சித்திரம், சிங்கள வினாவிடை குடும்ப மட்டம் 2 , திருக்குறள் குடும்ப மட்டம் 2 , செயற்பட்டு மகிழ்வோம்
7. சி. நிதுசியா - செயற்பட்டு மகிழ்வோம் குடும்ப மட்டம் 2
8. ஜெ.தருசன் - செயற்பட்டு மகிழ்வோம் குடும்ப மட்டம் 2
9. ம.கிதுர்சிகன் - பண்ணிசைப்போட்டி ,செயற்பட்டு மகிழ்வோம் குடும்ப மட்டம் 2
10. ஜெ.திலக்சன் - பண்ணிசைப்போட்டி ,செயற்பட்டு மகிழ்வோம் குடும்ப மட்டம் 2
11. சி.தீபிகா - பண்ணிசைப்போட்டி ,செயற்பட்டு மகிழ்வோம் குடும்ப மட்டம் 2
12. த.புசானா - செயற்பட்டு மகிழ்வோம்
13. ச.திபிசா - பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2
14. சி.அபிநயா - பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 2

**தரம் 4**

1. த.துசாரா – வகுப்புநிலை 1, பாடங்கள் தமிழ், கணிதம், சுற்றாடல், போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல் குடும்ப மட்டம் 3 , பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 3, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 1, திருக்குறள் ,தமிழ் தின பாவோதல், செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
2. ஜெ. கிருத்திகா - வகுப்புநிலை 2, பாடங்கள் தமிழ், கணிதம், சமயம் , ஆங்கிலம், போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல் குடும்ப மட்டம் 3 , பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 3, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 1, திருக்குறள் ,தமிழ் தின பாவோதல், செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
3. ச.சனுசன் - வகுப்புநிலை 3,வரவொழுங்கு, போட்டிகள் பண்ணிசைப்போட்டி, செயற்பட்டு மகிழ்வோம்
4. ச.கஸ்தூரி - ஆங்கிலம், போட்டிகள், ஆங்கிலம் சொல்வதெழுதல் குடும்ப மட்டம் 2 , பண்ணிசைப்போட்டி

குடும்ப மட்டம் 3, சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 1, திருக்குறள் ,

5. த.சங்கீர்த்தன் - வரவொழுங்கு , பண்ணிசைப்போட்டி, செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
6. க.சுடர்நிலா- போட்டிகள் சித்திரம், பண்ணிசைப்போட்டி, குடும்ப மட்டம் 3, செயற்பட்டு மகிழ்வோம்
7. சி. ஓவியன் - பண்ணிசைப்போட்டி, செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
8. ச.சகானா - செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
9. செ. சீராளன் - செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
10. கி.துசந்தன் - செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
11. ச.லகிம்சன் - செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
12. ப.கனிசியா - செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
13. ச.கம்சியா - செயற்பட்டு மகிழ்வோம் வலய மட்டம் 2ம் இடம்
14. த. அனசாலோமி – பாடம் கிறிஸ்தவம்
15. ச.தமிழோதினி - பண்ணிசைப்போட்டி குடும்பமட்டம் 3
16. ந.விதுசன் - பண்ணிசைப்போட்டி குடும்பமட்டம் 3
17. ஜெ.துவாராகா- பண்ணிசைப்போட்டி குடும்பமட்டம் 3
18. ம.சரனிகா - பண்ணிசைப்போட்டி குடும்பமட்டம் 3

## தரம் 5

1. நி. சண்சிகா - வகுப்புநிலை 1, பாடங்கள் தமிழ், கணிதம், சுற்றாடல்,ஆங்கிலம், போட்டிகள் சித்திரம் கோட்டமட்டம் 3, துரிதகணிதம், ஆங்கிலம் சொல்வதெழுதல் குடும்ப மட்டம் 1 , சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 1, பொது அறிவு குடும்ப மட்டம் 1, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி 177 புள்ளிகள்

2. நி. கிஷாலினி - வகுப்புநிலை 2, பாடங்கள் தமிழ், சமயம், ஆங்கிலம், போட்டிகள் துரிதகணிதம், ஆங்கிலம் சொல்வதெழுதல் குடும்ப மட்டம் 1 , சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 1, பொது அறிவு குடும்பமட்டம் 1, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி 161 புள்ளிகள் செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2,
3. த.கிருஷிகா - வகுப்புநிலை 3, பாடங்கள் தமிழ், கணிதம், சுற்றாடல்,ஆங்கிலம், போட்டிகள் சித்திரம் கோட்டமட்டம் 3, துரிதகணிதம், ஆங்கிலம் சொல்வதெழுதல் குடும்ப மட்டம் 1 , சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் 1,
4. வி.விதுசன் - பாடம் கிறிஸ்தவம் செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் 70
5. ஸ்ரீ.கஜானந்தன் - போட்டிகள் பொது அறிவு குடும்பமட்டம் சிங்கள வினாடிவினாவிடை கோட்டமட்டம் 1, புலமைப்பரிசில் பரீட்சை 133
6. ந.றஜீவன் - செயற்பட்டுமகிழ்வோம் போட்டி கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 80
7. க.தமிழ்வேந்தன் - துரிதகணிதப் போட்டி கோட்டமட்டம், புலமைப்பரிசில் பரீட்சை 122
8. ச.சரன்யன் - புலமைப்பரிசில் பரீட்சை 114
9. நா.நவாஸ் - செயற்பட்டுமகிழ்வோம் போட்டி கோட்டமட்டம் 2,
10. ஜெ.பாருசன் - செயற்பட்டுமகிழ்வோம் போட்டி கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 81
11. ச.சதுாசன் - செயற்பட்டுமகிழ்வோம் போட்டி கோட்டமட்டம் 2,
12. சஞ்ஜீவன் - புலமைப்பரிசில் பரீட்சை 143
13. ச.பவிஸ்ணன் - புலமைப்பரிசில் பரீட்சை 160
14. க.யசீனா – வரவு ஒழுங்கு, செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 145
15. கலைச்செல்வி - செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 104
16. த.தரனிகா - செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம், புலமைப்பரிசில் பரீட்சை 93
17. கு. திபிகா - வரவு ஒழுங்கு, செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 138,பொது அறிவு,

துரிதகணிதம், , சிங்களம் வினாவிடைப்போட்டி குடும்ப மட்டம் , தமிழ்தினம் இசைவும் அசைவும்

18. சி.கபிஷாயினி - செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 126
19. ஈ. தஜீகா - செயற்பட்டுமகிழ்வோம் கோட்டமட்டம் 2, புலமைப்பரிசில் பரீட்சை 1138
20. கு. மயூரி - புலமைப்பரிசில் பரீட்சை 98
21. த. பவிதரன் - புலமைப்பரிசில் பரீட்சை 77

**நல் ஒழுக்கமுடைய மாணவர்களுக்குரிய பரிசினை பெறுவோர்கள்**

1. ஸ்ரீ. கஜானந்தன்
2. க. யசீனா
3. செ. யதுர்சனன்

## பாராட்டுப்பெறும் பெற்றோர் வரிசையில்

பாடசாலைக்கு அதிகளவு சேவைகள் வழங்கியமை, நிகழ்வுகளில் பங்கேற்றமை, மாணவர்களை அழைத்துச்சென்றமை, செயலமர்வுகளில் பங்கு கொண்டமை, பாடசாலைக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்தமை மாணவர்களை ஊக்கமாக கற்பித்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் தெரிவு செய்யபட்டு பாராட்டுப் பெறுகின்றனர்

1. திரு. ஐ.நித்தியானந்தன்
2. திரு. தவலோகநாதன்
3. திரு. கனகலிங்கம்
4. திரு. யோகேஸ்வரன்
5. திரு. முருகதாஸ்
6. திருமதி. ம.ரஜனி
7. திரு, திருமதி பத்மகாந்தன்
8. திரு,திருமதி சுகந்தன்
9. திரு, திருமதி
10. திரு,திருமதி சந்திரலிங்கம்

## மாணவர்களின் ஒழுங்குவிதிகள்

1. காலை 7.15 மணிக்கு முன்னர் பாடசாலைக்கு வருகைதந்து காலைப்பொறுப்புகளை உரியவாறு செய்வோம்.
2. மாணவர்கள் சீருடையுடன் கழுத்துப்பட்டி, பாதணி (சப்பாத்து) அணிந்து தூய்மையாகச் சமூகமளிப்போம்.
3. மாணவர்கள் பொய்பேசுதல், களவெடுத்தல், பாடசாலைச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் என்பன குற்றமாகும் என்பதனை அறிவோம்.
4. அதிபர், ஆசிரியர்கள், மாணவத்தலைவர்கள் ஆகியோரின் கட்டளைக்கு கீழ்படிந்து நடப்போம்.
5. ஆசிரியர் இல்லாத சமயத்தில் மாணவத்தலைவரின் பணிக்கு ஒத்துழைப்போம்.
6. எப்பொழுதும் பண்பான இனிய சொற்களையே பயன்படுத்துவோம்.
7. அனுமதிபெற்றே வகுப்பறையை விட்டுவெளியே செல்வதும் வகுப்பறைக்குள் வருவதும் முறையானது என அறிவோம்.
8. நகங்கள் வெட்டித் தூய்மை பேணுவோம்.
9. பாடசாலையில் பெண்பிள்ளைகளின் சாதாரண தோடு தவிர்ந்த வேறு தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்ப்போம்.
10. தமிழ் சைவ மரபிற்கு ஏற்ப வீபூதி தரித்து பொட்டிட்டு சமய ஒழுக்க சீலராய் வருவோம். ஏனைய மதங்களையும் மதிப்போம்.
11. ஆண்மாணவர்கள் தலைமுடி சீராக வெட்டி தலைசீவி சேட் காற்சட்டையினுள்விட்டு ஒழுங்காக வருவோம்.
12. பெண் மாணவிகள் நீலநிற றிபன்கட்டி கறுப்பு கிளிப் அணிந்து வருவோம்.

## யா/ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

### பாடசாலை கலாசார விழுமியங்கள்

1. ஆசிரியர்கள் மாணவர்கள் பாடசாலை ஆரம்பமாவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு சமூகமளிக்கவேண்டும்.
2. பாடசாலை நேரமான 7.30 முதல் 01.30 வரையான நேரத்தில் கற்றல் கற்பித்தல் மற்றும் இணைப்பாடவிதானத்திற்கு முக்கியத்துவமளிக்கும் அதேவேளை இடையூறுகள் ஏற்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.
3. பாடசாலைக்கு பிந்திவருதல், பாடசாலை முடிவடைய முன்னர் செல்லுதல், பாடசாலைச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் என்பன குற்றங்களாகும்.
4. பாடசாலை முடிவடைய முன்னர் வீடு செல்வதாயின் காரணத்தைக் குறிப்பிட்டு பெற்றோர் ஒப்பமிட்டு அழைத்துச் செல்லவேண்டும்.
5. பாடசாலைக்குள் பிரவேசிக்கும் யாவரும் பாடசாலைச் சட்டதிட்டங்கள் விதிமுறைகள் மற்றம் கலாசார விழுமியங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.
6. மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பாக பெற்றோர்கள் அனுமதிபெற்று 1.00 மணிக்கு பின்னர் கற்றலுக்கு இடையூறு ஏற்படாதவகையில் அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாட வேண்டும்.
7. மாணவர்களின் கற்றலில் பெற்றோர்கள் அக்கறையுடன் செயற்படுவதுடன் கொடுக்கப்பட்ட பயிற்சிகளையும் வீட்டுவேலைகளையும் பரிசீலனை செய்யவேண்டும்.
8. மாணவர்களின் வரவு ஒழுங்காக இருக்கவேண்டும். வரமுடியாத சந்தர்ப்பங்களில் முன்கூட்டியே அனுமதி பெறல் வேண்டும். தவிர்கமுடியாமல் வராவிட்டால் AB காட்டில் பதிந்து பெற்றோர் கையொப்பமிடவேண்டும்.
9. பாடசாலைக் கூட்டம் நிகழ்வுகளில் கட்டாயம் பெற்றோர் கலந்து பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும்.
10. யாவரும் பாடசாலையில் இடம்பெறும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஏனைய நிகழ்வுகளிலும் ஊக்கத்துடன் பங்கொள்ளவேண்டும்.

கணினி அன்பளிப்பு திரு. பா. பாலகனேசன்.



ராஸ்ரிக் கதிரை 6 அன்பளிப்பு திருமதி. கலாவதி வசீகரன்.



பிரிண்டர் அன்பளிப்பு திருமதி சித்திரா குடும்பத்தினர்



கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு கோண்டாவில்
ஸ்ரீ சத்திய சாயி நிலையம்





மல்ரிமீடியா (பல்லூடக எறி) அன்பளிப்பு வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ பா.கஜதீபன்



மணி அன்பளிப்ப திருமதி. எஸ். மகேஸ்வரி



நுவர்ஜின செல்வர்கள் அன்பளிப்பு 10000 ரூபா மற்றும் கொப்பிகள்

கலான் வங்கி சுன்னாகம் (செல்வி சி. தர்சினியின் முயற்சியினூடாக)




சமையல் உபகரணங்கள் வழங்கியமை உலக உணவுத்திட்டம் ஊடாக

017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்



[illegible] விழா 11.01.2017



புலமைப்பரிசில் பரீட்சைக்கு [illegible] வழங்கும் நிகழ்வு

## 2017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்



சிறுவர்தின நிகழ்வின் போது



இராணுவத்தினரின் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு

7. இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்

## நவராத்திரிகாலப் போட்டிகள்



## ஆசிரியர் தின விழா 2017



2017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்

செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் - 2017 வலயமட்டத்தில் 2 ஆம் இடம்பெற்ற தரம் 4 கைப்பப் பிரிவு அணியினர், அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோருடன்



புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்திபெற்ற மற்றும் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களுடன்



2017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்

மழை வெள்ளத்தின் மத்தியில் மாணவர்கள்.





2017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்
பெற்றோர்கள், மற்றும் சமூகத்தவர்களின் பங்களிப்புகள்





2017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்



2017 இல் இடம்பெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்



# அதிபர், ஆசிரியர் மற்றும் புலமை வெற்றியாளர்கள் - 2017



திரு.
. ஸ்ரீ. கிருஷ்ணா
(அதிபர்)



திருமதி.
ப. கவிதா
(ஆசிரியர்)



நி. சண்ஷிகா
(177)



நி. கிஷாலினி
(161)



ச. பவிஸ்ணன்
(160)



த. கிருஷிகா
(146)



க. யசீனா
(145)



இ. சஞ்ஜீவன்
(143)



கு. தீபிகா
(138)



ஸ்ரீ. கஜானந்தன்
(133)



ஈ. தஜீகா
(133)



ச. கபிஷாயினி
(126)



க. தமிழ்வேந்தன்
(122)



ச. சரண்யன்
(114)



ப. கலைச்செல்வி
(104)



பரிசளிப்பு விழாத் தொகுப்பாக்கத்திற்குரிய

முழுமையான அனுசரனை

திரு. திருமதி. செல்வரட்ணம்

ஞானதேவி

Eeswaa
Digital Printing